# மக்களின் சிறந்த நலன்களை உறுதிப்படுத்துவது

# 5ஜி குறித்து உங்கள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் எழுப்பி வரும் கேள்விகள்

**கேள்வி:**
5ஜி நடைமுறையை துரிதப் படுத்துவதற்கான முடிவின் அடிப்படை என்ன?

**பதில்:**
5ஜி நெட்வொர்க் கிடைக்கும் தன்மையில் நமது அண்டை நாடு களை விட மலேசியா ஏற்கெனவே பின்தங்கியுள்ளது. சிங்கப்பூர், இந்தோனேசியா, தாய்லாந்து, வியட்னாம், பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகள் எல்லாம் 2019 ஆம் ஆண்டிலேயே தங்கள் 5ஜி நெட்வர்க் தொடர்பை தொடங் கியுள்ளன. 5ஜி நெட்வர்க் தொடர்பை ஏற்படுத்துவதை நாம் இன்னும் தாமதப்படுத்தினால் நமது பொருளாதார போட்டா போட்டியின் தன்மையை இது பாதிக்கும். மேலும், நமது தேசிய மேம்பாட்டு செயல்முறைக்கும் இது இடையூறுகளை ஏற்படுத் தும்.

**கேள்வி:**
5ஜி திட்டத்தை அமல்படுத் தும் பணி தனியார் துறைக்கு அல்லாமல் அரசாங்கத்திற்கு முழுமையாகச் சொந்தமான ஒரு நிறுவனத்திற்கு ஏன் வழங்கப் பட்டது?

**பதில்:**
டிஜிட்டல் பொருளாதாரத் தின் வளர்ச்சிக்கான இணையத் தொடர்பு முக்கியமான பங்கினை ஆற்றுவதால், அதை உணர்ந்து மலேசிய டிஜிட்டல் பொருளாதார திட்ட வரைவை (மைடிஜிட்டல்) அறிவிப்பதற் காக 2021 பிப்ரவரி மாதம் ஒரு தீர்க்கமான முடிவை அரசாங்கம் எடுத்தது.

மைடிஜிட்டலின் கீழ் எடுக்கப் பட்டுள்ள பிரதான நடவடிக் கைகளில் ஒன்றாக, 5ஜி அமலாக் கத்தை துரிதப்படுத்தும் நோக்கத்தில் டிஜிட்டல் நேஷனல் பெர்ஹாட் (டி.என்.பி.) எனும் நிறுவனம் சிறப்பாக அமைக்கப் பட்டது. செலவுகளை மீட்டெ டுக்கும் மாதிரியின் அடிப்படை யில் இது செய்யப்பட்டது.

**கேள்வி:**
டி.என்.பி. ஒரு புதிய நிறுவனம். அப்படியிருக்க இத்தொழிலில் நீண்ட கால அனுபவம் கொண்ட மற்ற தொலைத்தொடர்பு நிறுவனங்களுடன் ஒப்பிடு கையில் இதற்கு என்ன அனுபவம் உள்ளது?

**பதில்:**
டி.என்.பி. தோற்றுவிக்கப் பட்ட முதல் நாளிலிருந்து இத்தொழில்துறையில் பழுத்த அனுபவம் உள்ளவர்களாலும் தனியார் துறை நிபுணர்களாலும் இந்நிறுவனம் நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

**கேள்வி:**
தற்சமயம் ஏன் எந்த ஒரு தொலைத்தொடர்பு நிறுவனமும் டி.என்.பி.யுடன் பதிவாகவில்லை?

**பதில்:**
டி.என்.பி.யுடன் தொலைத்தொடர்பு நிறுவனங்கள் பதிவாவதற்கு, நுழைவுக்காக கட்டாய தரநிலைகளுக்கு ஏற்ப Reference Access Offer (RAO) எனும் அணுகல் சலுகை குறியீடு வெளியிடப்பட வேண்டும்.

எப்படி இருப்பினும், 2021 டிசம்பர் முதல் தேதி டி.எம். பெர்ஹாட் (TM Berhad) நிறுவனம் டி.என்.பி. (DNB) யுடன் 5ஜி நெட்வர்க் பரீட்சார்த்த உடன்பாட் டில் கையெழுத்திட்டது. மற்ற தொலைத்தொடர்பு நிறுவனங்களும் கூடிய விரைவில் டி.என்.பி.யுடன் 5ஜி நெட்வொர்க் பரீட்சார்த்த உடன்பாடுகளில் கையெழுத்திடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**கேள்வி:**
5ஜி நெட்வொர்க்கின் அமலாக்கம் ஒரு பிரத்தியேக உரிமையாக இருந்து, போட்டா போட்டியை கட்டுப்படுத் துமா?

**பதில்:**
அந்த தொலைத்தொடர்பு நிறுவனம் மலேசிய போட்டி ஆணையத்தின் 2020 ஆம் ஆண்டு போட்டா போட்டி சட்டத் திற்கு (சட்டம் 712) உட்பட்டது அல்ல. அது போலவே, போட்டித் தன்மைக்கு எதிரான அல்லது பிரத்தியேக நடவடிக்கைகளை மேற்கொள்வதில் அச்சட்டத்திற்கு இணங்கிப் போகும் அல்லது சந்தை அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்யும் பிரச்சினைக்கு இங்கு இடமில்லை. தொலைத்தொடர்பு தொழில்துறையில் போட்டி என்ற விவகாரம் சட்டம் 588 இன் கீழ் நெறிப்படுத்தப்படுகிறதே தவிர சட்டம் 712 இன் கீழ் அல்ல.

தொலைத்தொடர்பு துறைக்கான ஒருங்கிணைப்பு நிறுவனம் என்ற முறையில் எம்.சி.எம்.சி. மட்டுமே கடுமையான விதிமுறைகளை விதிக்கின்றது. இதன் தொடர்பில், 1998 ஆம் ஆண்டு தொலைத்தொடர்பு, பல்லூடகச் சட்டம் டி.என்.பி. நடவடிக்கைகளை ஒருமுகப்படுத்துவதற்கான போதுமான கட்டமைப்பை வழங்குகிறது. இவற்றில் கீழ்க்காண்பவை அடங்கும்:

1. நியாயமான, சமமான அடிப்படையில், சட்டம் 588 இன் கீழ் உரிமங்களுக்கு 5ஜி மொத்த விற்பனை திறனை வழங்குவது டி.என்.பி.க்கு கட்டாயமாக்கப்பட்டுள்ளது;
2. சில்லறை நடவடிக்கைகளில் ஈடுபட டி.என்.பி. க்கு அனுமதி கிடையாது. சில்லறை சந்தையானது தங்கள் சொந்த வலிமையின் அடிப்படையில் போட்டி போடும் தொலைத்தொடர்பு நிறுவனங்களைச் சார்ந்துள்ளது.
3. தொலைத்தொடர்பு நிறுவனங்களுக்கு விற்கப்படும் 5ஜி மொத்த விற்பனை திறன் அந்தந்த நிறுவனங்களின் தனிப்பட்ட தேவைகளுக்கு ஏற்ப அமையும். தொலைத்தொடர்பு நிறுவனங் களுக்கான 5ஜி திறன் சலுகையை உறுதி செய்ய டி.என்.பி, அனுமதிக் கப்படாது.
4. டி.என்.பி. மற்றும் தொலைத்தொடர்பு நிறுவனங் களுடனான பேச்சுவார்த்தை முடிவடைந்ததும் 5ஜி மொத்த விற்பனைக்கான விலையை எம்.சி.எம்.சி. அங்கீகரிக்கும். பிறகு வெளியிடப்படவிருக்கும் RAO ஆவணத்தில் இதன் விலை குறிப்பிடப்பட்டிருக்கும். மற்றும்
5. அதே RAO ஆவணத்தில் வெளியிடப்படவிருக்கும் சேவை அளவு உடன்பாட்டின் வாயிலாக சேவையின் தரம் என்ற ரீதியில் SWN னின் செயலாக்கத்தை எம்.சி.எம்.சி. எப்போதும் நெறிப்படுத்தும்.

**கேள்வி:**
டி.என்.பி. எவ்வாறு நிர்வகிக்கப் படும்?

**பதில்:**
★ ஏழு உறுப்பினர்களைக் கொண்ட இயக்குநர்கள் வாரியத்தால் டி.என்.பி. நிர்வகிக்கப்படுகிறது. இவர்களில் அரசாங்க தரப்பில் இரு உறுப்பினர்கள், தனியார் துறையைச் சார்ந்த 5 உறுப்பினர்கள் அடங்குவர். இவர்கள் அனைவரும் தொலைத்தொடர்பு நடவடிக்கைகள், இணைய பாதுகாப்பு, சட்டம் மற்றும் நிதி ஆகிய துறைகளில் வலுவான நிபுணத்துவத்தைக் கொண்டவர்கள்.

★ நிதி அமைச்சுக்கு முழுமையாகச் சொந்தமான ஓர் அமைச்சு என்ற வகையில், அதன் நடவடிக்கைகள் மற்றும் நிதி செயலாக்க விவகாரங் களில் டி.என்.பி நேரடியாக நிதி அமைச்சுக்கு பதில் கூறும்.

★ 1998 ஆம் ஆண்டு தொலைத் தொடர்பு, பல்லூ டகச் சட்டத்தின் கீழ் உரிமம் பெற்றிருப்பதால், தொலைத் தொடர்பு பல்லூடக அமைச்சின் கீழ் எம்.சி.எம்.சி. இதனை கண்காணிக்கின்றது.

★ கூடுதலாக, தனியார் துறையின் நிதியுதவியினை டி.என்.பி. பெறும் என்பதால் நிதிக் கழகங்கள் மற்றும் முதலீட்டாளர் களிடமிருந்து வரும் நிதிகளைப் பெறுவதுடன் வரும் அனைத்து உதவியாளர் பொறுப்புகளையும் அது ஏற்றிருக்கும்.

★ ஆதலால், நேர்மை மற்றும் உரிமையோடு டி.என்.பி. நிர்வகிக் கப்படுவதை அரசாங்கத்தின் 4 நிலைகள் உறுதி செய்யும்.

**கேள்வி:**
இதனால் மக்களுக்கு ஏற்படும் செலவுகள் பற்றி எங்களுக்குச் சொல்ல முடியுமா?

**பதில்:**
டி.என்.பி. அரசாங்கத்திற்கு சொந்தமானது. அதே சமயம் எம்.சி.எம்.சி.யினால் நெறிப்படுத் தப்படுகிறது. டி.என்.பி. வர்த்தக முறைகளின் கீழ் ஒப்புக்கொள்ளப் பட்டபடி தனியார் துறை நிதிக் கழகங்கள் இதற்கு நிதி உதவி களை வழங்குகின்றன. ஆகையால், அரசாங்க துறை அல்லது அரசாங்கத்திடமிருந்து எந்த நிதி உதவியும் இதற்குத் தேவை இல்லை.

**★ டி.என்.பி. தோற்றுவிக்கப்பட்ட முதல் நாளிலிருந்து இத்தொழில்துறையில் பழுத்த அனுபவம் உள்ளவர்களாலும் தனியார் துறை நிபுணர்களாலும் இந்நிறுவனம் நிர்வகிக்கப்பட்டு வருகிறது.**

**★ ஏழு உறுப்பினர்களைக் கொண்ட இயக்குநர்கள் வாரியத்தால் டி.என்.பி. நிர்வகிக் கப்படுகிறது. இவர்களில் அரசாங்க தரப்பில் இரு உறுப்பினர்கள், தனியார் துறையைச் சார்ந்த 5 உறுப்பினர்கள் அடங்குவர். இவர்கள் அனைவரும் தொலைத் தொடர்பு நடவடிக்கைகள், இணைய பாதுகாப்பு, சட்டம் மற்றும் நிதி ஆகிய துறைகளில் வலுவான நிபுணத்துவத்தைக் கொண்டவர்கள்.**